Agricultural Engineering Workshop

*109 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to expand the Agricultural Engineering Workshop at Washermanpet, Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) இந்தப் பணிக்களரியில் கூடுதல் ஆட்களைக் கொண்டும், இயந்திரங் களைக் கொண்டும் விரிவுபடுத்தவும், 12 பெர்க்குஸன் டிரில் கருவிகளையும், 3 ரோட்டரி டிரில் கருவிகளையும் தயாரிப்பதற்காகவும் ரூ. 10.87 லட்சம் செலவில் அடங்கல் திட்டமொன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் பணிந்தனுப்பி யுள்ளார். தற்போதைய நிதி நிலை காரணமாக இத்திட்டம் 1972 அக்டோபர் வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. இதன் பிறகு இது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பருத்தி சாகுபடி

*110. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு பல்லடம் வட்டத்தில் எத்தனை எக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது?

(இ) அதற்கு அரசாங்கம் என்ன உதவிகள் அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ): தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் பல்லடம் வட்டத்தில் பருத்தி பாசனப் பயிராக 31,220 எக்க ரிலும் மானாவாரிப் பயிராக 21,720 எக்கரிலும் பயிரிடப்பட்டு வந்தது. 1—8—1971 முதல் மத்திய அரசின் முழு ஆதரவுடன் பருத்தி தீவிர அபி விருத்தி திட்டம் செயல்படத் தொடங்கி, மேற்குறிப்பிட்ட 31,220 எக்கர் இப்புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனவே, பல்லடம் வட்டத் தில் தற்போது தீவிர சாகுபடித் திட்டத்திற்குப் பதிலாக மத்திய அரசு ஆதர வுடன் பருத்தி தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. மானாவாரி நிலமான 21,720 எக்கர்களில் மாநில பருத்திப் பெருக்குத் திட்டம் செயல்படு கிறது.

1972 ஆகஸ்ட் 12]

(இ) இப்புதிய திட்டத்தின் கீழ் பாசன பருத்திப் பயிருக்குக் கீழ் கண்ட அளவுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன:—

1 பூச்சி மருந்துகட்கு		முதல் மூன்று மருந்து தெளிப்புகளுக்கு 25 சதவிகிதம் பின்னர் வரும் தெளிப்புகளுக்கு 12 தெளிப்பு வரை 33–1/3 சதவிகிதம்.
2 களைக்கொல்லி மருந்து கட்கு.		33–1/3 சதவிகிதம்.
3 விசைத் தெளிப்பான் களுக்கு.		தெளிப்பான் ஒன்றுக்கு 25 சதவிகிதம் ரூபாய் 200-க்கு மேற்படாமல்.
4 செயல்முறை விளக்கங் களுக்கு.		அரை ஹெக்டேர் பாத்தி ஒன்றுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்து, முதலிய பொருள்களுக்கு முழு விலையாக ரூ. 200 மட்டும்.

** 111. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவையில் பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளுக்கு எண்ட்ரீன், செவின் போன்ற மருந்துகள் சரிவர கிடைக்காமல் பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டதாக ஏதும் தகவல் இல்லை. பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகிப்பதில் கோவையில் செயல்பட்டு வரும் தீவிர சாகுபடித் திட்டத்திற்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இத்திட்ட நடைமுறையில் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான தேவை முக்கியமாக எண்ட்ரின், செவின் மருந்துகளுக்கு எதிர்பாராத அளவுக்கு அதிகமாகி உள்ளது. மேற்கண்ட மருந்துகள் தயாரிக்க தேவையான மூலப் பொருள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டி இருப்பதால் தேவையான மூலப்பொருள் கிடைக்கவில்லை. ஆதலால் விவசாயிகளுக்கு தேவையான அளவு வழங்க முடியவில்லை. ஆயினும் மேற்கூறிய மருந்துகட்கு ஈடாக ஈதைல் பாரத்தின், டி.டி.டி. 50 சத வீதம் போன்ற மருந்துகளை தேவையான அளவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்போது நம்முடைய பஞ்சாலைகளில், நெட்டிமைப் பருத்தியில்தான் அதிக லாபம் கிடைக்கிறது என்று சொல்